**<u>அசல் வழக்கு எண். 146/2019</u>**

22.11.2023

**பெயர் –சரஸ்வதி (Pw1)**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

(1) 22.11.2011 ம் தேதி பிரதிவாதியின் தம்பி நாகராஜ் என்னை அவரது முதல் மனைவியை சட்டப்படி விவாகரத்து செய்து விட்டு இந்து முறைப்படி, குலவழக்கப்படி, என்னை இரண்டாவது திருமணம் செய்து கொண்டுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் நகாரஜின் சட்டப்படியான 2 வது மனைவி அல்ல என்றால் சரியல்ல. நான் நாகராஜ் சட்டப்படி விவாகரத்து செய்துள்ளார் என்பதை காட்ட ஆவணம் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நகல் தாக்கல் செய்துள்ளேன். அசல் ஆவணங்கள் உள்ளது. எனக்கு குழந்தைகள் இல்லை. இந்த வழக்கில் நான் நாகராஜ் என்னை இரண்டாவது திருமணம் செய்ததற்கு ஆதரவாக இந்த வழக்கில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் பிரதிவாதியையும் அவரது தாயார் கண்டியம்மாள் எப்போதும் பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. என் கணவரும், நானும் அவர் இறக்கும் வரை பராமரித்து வந்தோம். கண்டியம்மாளின் பெயர் எனது குடும்ப அட்டையில் உள்ளது.

(2) நான் இந்த வழக்கில் சொன்னபடி கண்டியம்மாளுக்கு மருத்துவ செலவு எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் உண்மையிலேயே கண்டியம்மாளுக்கு மருத்துவ செலவு செய்திருந்தால் அதை இந்த வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் நீண்ட நாட்களுக்கு முன்பு மருத்துவ செலவு செய்ததால் அந்த ஆவணங்கள் இல்லை.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

K VIJAYAKUMAR

Digitally signed by K VIJAYAKUMAR
Date: 2023.11.22 09:28:48 +0200

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்